# நெடுநல்வாடை முல்லை நில மக்களின் வாழ்வியல் பண்பாடு

*செல்வி து. சஞ்சனா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383303

**ஆய்வுச் சுருக்கம்**

*பெரும் சிறப்பு வாய்ந்த எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பழந்தமிழரின் வாழ்வியலைக் காட்டும் கண்ணாடி. ஆசிரியப்பாவால் அமையப்பெற்ற நெடுநல்வாடை, மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனாரால் 188 அடிகளைக் கொண்டு இயற்றப்பட்டது. போருக்குச் சென்ற தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு வாடைக் காலமானது நீண்ட நெடும் காலமாக இருப்பதனைப் பற்றி கூறும் நக்கீரனார் அவற்றினூடே நிலம், தெய்வம், மக்களின் வாழ்வு, போர் வீரர்களின் திறம், அரசர்களின் மேன்மை ஆகியவற்றை சிறப்புற விவரிக்கின்றார். நெடுநல்வாடையில் நக்கீரனார் எடுத்தியம்பியுள்ள முல்லை நிலத்தில் வாழும் மக்கள், தெய்வம், உணவு, பறை, தொழில்கள் ஆகியவற்றினை ஆராய்ந்து அவர்களின் வாழ்வியல் பண்பாட்டை எடுத்துரைப்பது இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கம்.*

**முன்னுரை**

*கல்வி, வீரம், கொடைப் பண்பு என சகலத்திலும் சிறப்புற்று வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியல் பெட்டகமாக இருக்கும் சங்க இலக்கியங்கள், நூற்றாண்டுகள் பல கடந்தும் அணையா விளக்காக சுடர்கின்றது. பத்துப்பாட்டில் ஏழாவதாக அமைக்கப்பட்ட நெடுநல்வாடையில், முல்லைத்திணைக்குரிய மக்கள், தொழில், உணவு போன்ற வாழ்வின் நிலைகளைத் தொகுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**முல்லைத் திணை - நிலமும் மக்களும்**

**முல்லை நிலம்**

*கார்மேக நிறத்தோனான திருமால் உறையும் இடமாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் காடும் காடு சார்ந்த இடமுமே முல்லைத் திணைக்குரிய நிலம்.*

***"மாயோன் மேய காடுறை உலகமும்"***

***(தொல். பொருள். 5)***

*பண்டைய காலத் தமிழர்கள், தாம் வாழ்ந்த நிலங்களை அவற்றின் இயல்புக்கு ஏற்பவே வகைப்படுத்தினர். அவ்வாறே அந்நிலத்தில் வாழ்ந்த மக்களும் அந்நிலத்தின் தன்மைக்கேற்ப தங்கள் தொழிலை அமைத்துக் கொண்டனர். அதனைப் போலவே தாங்கள் வாழ்ந்த நிலத்தில் கிடைத்தவற்றையும் விளைந்தவற்றையும் உணவாகக் கொண்டனர்.*

**மக்கள்**

*ஆநிரைகளை மேய்ப்போர் ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர் என்று வழங்கப்பட்டனர். ஆயர்களும், வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்ட வேட்டுவர்களும் முல்லை நிலத்திற்குரிய தலைமக்கள்,*

***"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்***
***ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"***

***(தொல். பொருள். 23)***

*எனத் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.*

**கோவலர் (இடையர்)**

*ஆநிரைகளை மேய்க்கும் தொழிலுக்குத் தடையாகக் கார்காலம் வருவதாக நக்கீரனார் நெடுநல்வாடையில், பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

**"ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்"**
**(நெடு. 3)**

குற்றேவல் பணி செய்வோர் காவல் உடைய வீடுகளில் ஏவல் பணி செய்வோர் கருமை நிறம் கொண்ட அம்மியில் சந்தனம் போன்ற வாசனைப் பொருட்களை அரைப்பதனை,

**"கடியுடை வியல் நகர்ச் சிறுகுறுந் தொழுவர்,**
**கொள் உறழ் நறுங்கள், பல கூட்டு மறு"**
**(நெடு. 49-50)**

என வீடுகளில் சிறு சிறு பணிகள் செய்வதற்காக ஆட்கள் இருந்தமையையும், அவர்களை 'குறுந்தொழுவர்' என்றுஅழைக்கப்பட்டு வந்தமையையும் விவரிக்கின்றார் நக்கீரனார்.

## மறவர்கள்

வீரம் விளங்கும் போர்த் தொழிலினைச் செய்வோராகிய வேப்பம்பூ மாலையினைச் சூடிய மறவர்கள், திரண்ட பெரும் துதிக்கைகளை உடைய யானைகளை வீழ்த்தும் படி செய்தனர்,

**"களிறு களம் படுத்த பெருஞ்செய் ஆடவர்"**
**(நெடு. 171)**

என மறவர்களை 'பெருஞ்செய் ஆடவர்' என குறிப்பிடும் நக்கீரனார்,

**"வாள் தோட் கோத்த வன்கண் காளை"**
**(நெடு.182)**

என மறவர்களை 'வன்கண் காளை' என்றும் குறிப்பிடுகின்றார்.

## தெய்வம்

தலைவனைப் பிரிந்த தலைவி அவனின் நினைவுகளால் துயருற்றிருக்கிறாள். அதனால் பாசறையில் இருக்கும் அரசனுக்கு இப்பொழுது வெற்றி தருமாறு செவிலித்தாய் கொற்றவையை வேண்டுவதாக நக்கீரனார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"புலம்பொடு வதியும் நலம்கிளிர் அரிவைக்கு**
**இன்னா அரும்படர் தீர, விறல் தந்து**
**இன்னே முடிக தில் அம்ம"** **(நெடு 166-168)**

முல்லை நிலத்திற்குரிய தெய்வம் திருமாலாக இருப்பினும் போருக்கு செல்லும் அரசர்களும், மறவர்களும் வணங்கிடும் கொற்றவையிடம் போருக்கான வெற்றி கிட்டுமாறு செவிலித்தாய் வேண்டுவதாக பாடலினை அமைத்துள்ளார் நக்கீரனார்.

## உணவு

காடுகளினை இருப்பிடமாகக் கொண்ட முல்லை நில மக்கள், அந்நிலத்திலே விளைந்த வரகு, சாமை, திணை போன்றவற்றினை உணவாகக் கொள்ளவர் எனத் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

பயிர்களிலிருந்து கதிர்கள் வெளிப்பட்டன. அவற்றின் நெல்மணிகள் முற்றிய காரணத்தினால் நெற்கதிர்கள் தலை சாய்த்தன, என நீர் சூழ்ந்த வயல்வெளிகளில் பயிர் செய்யப்பட்ட நெல்லினை மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"அங்கண் அகல்வயல் ஆர்பெயல் கலித்த**
**வண்தோட்டு நெல்லின் வருகதிர் வணங்க;**
**முழு முதல் கமுகின் மணிஉறழ் எருத்தின்**
**கொழுமடல் அவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை**
**நுண் நீர் தெவிள வீங்கி, புடை திரண்டு"**
**(நெடு. 21-25)**

## தொழில்

காடுகளை வசிப்பிடமாக கொண்ட முல்லை நிலத்தின் தலை மக்கள் ஆநிரைகளை மேய்ப்பதனை முதன்மை தொழிலாக கொண்டனர்.

**"ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்**
**ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பி,**
**புலம்பெயர் புலம்பொடு கலங்கி, கோடல்"**
**(நெடு. 3-5)**

என பசு, ஆடு முதலிய கால்நடை விலங்குகளை வருந்தச் செய்யும்படியான கோலினை, எப்பொழுதும் தங்கள் கைகளில் வைத்திருக்கும் இடையர்கள் என நக்கீரன நெடுநல்வாடையில் விவரிக்கின்றார்.

## போர்த் தொழில்

பெரிய துதிக்கைகளை உடைய யானையை வீழ்த்தும் வல்லமையுடைய மறவர்கள்

*ஒலிப் பொருந்திய வாளால் வெட்டப்பட்டு விழிப்புண் பெற்ற பெரும் வீரமுடையவர்கள்,*

***"களிறு களம் படுத்த பெருஞ்செய் ஆடவர்,***
***ஒளிறு வாள் விழுப்புண் காணிய, புறம் போந்து,***
***வடந்தைத் தண் வளி எறிதொறும் நுடங்கி"***
***(நெடு.171-173)***

*என போர் தொழில் செய்யும் மறவர்களின் வீரத்தினை நக்கீரனார் சிறப்புடன் விவரிக்கின்றார்.*

**முடிவுரை**

*காட்டினை தனது நிலமாகக் கொண்டது முல்லைத்திணை, அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் சார்ந்த உணவு, தொழில், தெய்வம் வழிபாடு போன்ற வழிவழி பண்பாட்டுச் செய்திகளையும், அவர்களது சமூக வாழ்வியலோடு இணைத்து, மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் தனது நெடுநல்வாடையில் விவரித்துள்ள பாங்கினை இவ்வாய்வுக்கட்டுரை விவரிக்கின்றது.*

**துணைநூற்பட்டியல்**


1. *திருஞானசம்பந்தம். ச (உரையாசிரியர்) - தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் (2020) - கதிர் பதிப்பகம், 93, தெற்கு வீதி திருவையாறு*
2. *பாலூர் கண்ணப்ப முதலியார் - தமிழ் இலக்கிய அகராதி (1957) - சென்டரல் புக் டிப்போ -5.*
3. *விஜயராகவன். கோ (பதிப்பாசிரியர்) தமிழ் - தமிழ் பையடக்க அகராதி (2022) - தமிழ்நாடு அரசு*
4. *மோகன். இரா (உரையாசிரியர்) - பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற்பகுதி) (2004) -நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600 098*
5. *மோகன். இரா (உரையாசிரியர்) - பத்துப்பாட்டு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி) (2004) -நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600 098*